# பதிற்றுப்பத்தில் வீட்டுக் கருவிகள்

கோவி. சிவபாலன்.

சங்க காலத்தெழுந்த எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றுக விளங்கும் பெருமை சான்றது பதிற்றுப்பத்து. இதைத் தொகுத்தாரும், தொகுப்பித்தாரும் இன்னுரென்பது அறியப்ப டவில்லே. சேரமன்னனுன யானேக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை பதிற்றுப்பத்தைத் தொகுத்தோ தொகுப்பித்தோ இருக்கலாம் என்பர். (1)

சேர மன்னர்களேயும், சேர நாட்டையும் நோக்கமாகக் கொண்டு பாடப்பட்ட விழுமிய நூல் இது. பத்துச் சேர அரசர்களேப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய பப்பத்துப் பாடல்களின் தொகுதியே பதிற்றுப்பத்து என்று பெயர் பெற்றது. ஆசிரியப்பாவினுல் ஆகிய புறப்பொருளேப் பற்றிய நூறு செய்யுள்கள் இதில் அமைந்துள. பதிற்றுப்பத்தென்பது இற்றுச்சாரியை பெற்று வந்தது என்று நேமிநாத உரையாசிரியர் கூறுவார். (2)

*'பதிற்றுப்பத்து நூறும் இவ்வாறே வருதலின்'*

என்று நச்சினுர்க்கினியர் உரை கூறுவதன் மூலம் அவருடைய காலமான பதின்மூன்றும் நூற்றுண்டில் நூறு பாடல்களும் இருந்துள்ளன என்பது அறியகிடக்கிறது (3). இன்று, முதல் பத்தும் இறுதிப் பத்தும் அழிந்து போன நிலேயில், எண்பது பாடல்கள் மட்டுமே எஞ்சியுள் ளன. எட்டடிச் சிற்றெல்லேயையும் (பதிற். பாடல் 47, 56) ஐம்பத்தேழடிப் பேரெல்லேயையும் (பதிற். பாடல் 90) உடைய பதிற்றுப்பத்து மொத்தம் ஆயிரத்து எண்ணூறு வரிகளில் அமைந்துள்ளது.

பதிற்றுப்பத்து பல்லாற்றுனும் சிறப்புடைய ஒரு நூல். தூய தமிழ்ச் சொற்களால் உருவாகியுள்ள இதில் பன்னிரெண்டு பிறமொழிச் சொற்கள் மட்டுமே கலந்துள்ளன. (4) இதில், பாடப்படுவோனும் ஒருவனே, பாடும் புலவனும் ஒருவனே. பாடலும் ஒரு பத்தே என்ற கட்டுப்பாடுள்ளது. இவ்வண்ணம் எல்லாவகையாலும் ஒரு நிகர் என்பதைக் குறிப்பதற்கா கவே, இந்நூலே *'ஒத்த பதிற்றுப்பத்து'* என்று புலவனுெருவன் பாடியுள்ளான். (5)

பிற நூல்களுக்கில்லாத சிறப்பாகப் பதிற்றுப்பத்தின் ஒவ்வொரு பத்துக்கும் இறுதியிலும் பதிகம் அமைந்துள்ளது. பதிற்றுபத்தின் மூல ஏடுகளில், ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் வைக்கப்பட்டுள்ளது. இம்முறையைப் பின்பற்றியே, உ. வே. சாமிநாதையரவர்கள் தம்முடைய பதிற்றுப்பத்துப் பதிப்பிலும் பதிகத்தை ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் வைத்துள் ளார்; ஔவை துரைசாமிப்பிள்ளேயின் பதிற்றுப்பத்துப் பதிப்பில், ஒவ்வொரு பத்தின் முன்பாக இப்பதிகம் வைக்கப்பட்டுள்ளது இங்கே அறியத்தக்கது. இப்பதிகத்தினுல் பாட்டுடைத் தலேவன் பெயர், அருஞ்செயல், பாடினுர் பெயர், பத்துச் செய்யுட்களின் பெயர், பாடியவர் பெற்ற பரிசில், அவ்வரசர் ஆண்ட கால அளவு முதலிய செய்திகளே அறிந்து கொள்ள முடிகிறது. பதிற்றுப்பத்தின் எண்பது பாடல்களுக்கும் துறை, வண்ணம், தூக்கு போன்றவை அமைந்திருத்தலும், அவ்வப்பாடல்களில் இடம் பெற்றுள்ள பொருள் பொதிந்த தொடரைப் பெயராக வைத்துள்ள நிலேயும் இந்நூலின் பிறிதொரு சிறப்பாகும். இனி, நான்காம் பத்தின் செய்யுள்கள் அந்தாதித் தொடையமைப்பைக் கொண்டுள்ளன. ஐங்குறுநூற்றின் நெய்தல் எட்டாம் பத்தும் அந்தாதித் தொடையாக அமைந்திருத்தல் காண்க. (6) இவற்றுல் சங்ககாலச் சான்றோர்களே பிற்காலப் புலவர்கள் அந்தாதி பாடுதற்கு வழிகாட்டிகளாக இருந்தார்கள் என்பது புலனுகிறது.

இப்படிப் பல்லாற்றுனும் சிறப்புடைய பதிற்றுப்பத்தில் பண்டைய சேரநாட்டு மக்களின் வாழ்க்கை முறை பாங்குறச் சொல்லப்பட்டிருக்கிறது. சேரநாட்டு மக்கள் பலவிதமான

கருவிகளைப் பயன்படுத்தியிருந்தது பதிற்றுப்பத்தின் வழி தெற்றெனத் தெரிகிறது. இசைக் கருவிகள், போர்க்கருவிகள் மற்றும் வீட்டுத் தேவையை நிறைவு செய்து கொள்வதற்குரிய கருவிகள் என அவர்கள் பயன்படுத்திய கருவிகளை நாம் பகுக்கலாம். வீட்டுத் தேவையை நிறைவு செய்து கொள்வதற்காக அவர்கள் எப்படிப்பட்ட கருவிகளைப் பயன்படுத்தினார்கள் என்பதையும் இன்று நாம் பயன்படுத்துகின்ற கருவிகளோடு ஒப்பு நோக்கக் கூடியனவாய் அவை அமைகின்றனவா என்பதையும் காண்பதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

முழுமையும் பாடாண்திணையைக் கொண்ட புறநூலான பதிற்றுப்பத்தில் பண்டைச் சமுதாய வாழ்க்கை முறையைச் சொல்லுவதென்பது அரிய செயலாகும். அந்த வகையில், வீட்டுத் தேவைக்காகப் பயன்படுத்தப்படும் கருவிகள் மிகச் சொற்பமாகவே சொல்லப்பட்டுள் ளன. அக்கருவிகளின் அமைப்பு பற்றிய செய்திகளும், பயன்பாடு பற்றி விளக்கங்களும் மிகக் குறைந்தே காணப்படுகின்றன. எனவே இக்கட்டுரையில், பதிற்றுப்பத்து சொல்லக்கூடிய வீட்டுக் கருவிகள் எடுத்துக்காட்டப்பட்டு, அக்கருவிகள் தொடர்பான விளக்கங்கள் குறைந்து தெளிவின்றியுள்ள இடங்களில் பிற சங்க நூல்களில் உள்ள செய்திகளின் துணையோடு விளக்கப்பட்டுள்ளன.

**வீட்டுக் கருவிகள்**

சங்க காலத் தமிழர்கள் வீட்டு வேலைகளைச் செய்வதற்கு இன்று நாம் பயன்படுத்துவ தற்கு இணையான கருவிகளை அன்று பயன்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் பயன்படுத்திய அக்கருவிகளின் அமைப்பும், அவற்றைச் செய்வதற்கு அவர்கள் பயன்படுத்திய பொருளும் இன்று நாம் பயன்படுத்தும் கருவிகளினின்றும் வேறுபட்டிருக்கலாம்; அவற்றின் பயன்பாட்டில் அன்றிருந்த நிலைக்கும் இன்றிருக்கும் நிலைக்குமிடையே பெரிய மாற்றமேதும் இருப்பதாய்த் தெரியவில்லை. இவற்றை நோக்குமிடத்து, அவர்களுடைய மேம்பட்ட வாழ்க்கை நிலையை உணரமுடிகிறது. இனி, பதிற்றுப்பத்து காட்டும் பண்டைத் தமிழர்கள் பயன்படுத்திய வீட்டுக் கருவிகளைக் காண்போம்.

**வெட்டுக் கருவிகள்**

இன்று நாம் இறைச்சி வகையை வெட்டுவதற்கு வெட்டரிவாளைப் பயன்படுத்துவது போன்றே பண்டை நாளிலும் ஒரு விதமான வெட்டுக் கருவியைத் தமிழர்கள் பயன்படுத்தி யுள்ளனர்.

*'எஃகு போழ்ந் தறுத்த வானிணக் கொழுங் குறை'* (12:16)

என்று பதிற்றுப்பத்து அக்கருவியைக் குறிப்பிடுகிறது. 'போழ்ந் தறுத்த' என்றதனால் அக்கருவி இறைச்சியைப் பிளந்து அறுப்பதற்குப் பயன்பட்டதை உணர முடிகிறது. 'எஃகு" என்ற நிலையில் மட்டுமே அக்கருவி இங்கே காட்டப்பட்டுள்ளது; அதன் அமைப்பு விளக்கப்பட வில்லை. இறைச்சியைப் பிளப்பதற்கும், அறுப்பதற்கும் அக்கருவி பயன்பட்டிருப்பதால் அது இன்றைய வெட்டரிவாளின் அமைப்பைக் கொண்டிருத்தல் கூடும் என்று தெரிகிறது. போரிலே, போர் வாளைப் பண்டைத் தமிழர் பயன்படுத்தியிருப்பதனால் சற்றேறத்தாழ அப்போர்வாளின் அமைப்பைப் போன்று வெட்டரிவாள் அமைந்திருக்கலாம். போருக்குப் பயன்படும் வாளே இறைச்சி வெட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டிருத்தல் கூடும். இது பற்றிய மேல் விளக்கமே தும் பதிற்றுப்பத்திலும் பிற சங்கப்பாடல்களிலும் இருப்பதாய்த் தெரியவில்லை.

**அடிமணை**

இறைச்சியை வைத்து வெட்டுவதற்கு இன்று நாம் அடிக்கட்டையைப் பயன்படுத்துவது போலவே அன்றும் அடிக்கட்டையைப் பயன்படுத்தியுள்ளனர். மரத்தாலான இக்கட்டை 'அடிமணை' என்றும் அழைக்கப்பெறும். பதிற்றுப்பத்து இதை,

*"எஃகுறச் சிவந்த வூனம்"* (24:21)

என்று குறித்துள்ளது. இதனுல் பண்டை நாளில் இக்கட்டை 'ஊனம்' என்றும் அழைக்கப் பெற்றது தெரிகிறது. எந்நாளும் இதன் மீது இறைச்சி வெட்டப்படுவதால் குருதி படிந்த இக்கட்டை சிவந்து காணப்படுகிறது. இக்கட்டையில் இறைச்சியை வைத்து வெட்டும்பொழுது, வெட்டுக்கத்தியால் வெட்டுப்பட்டு, மேடு பள்ளமுமாய் அக்கட்டையின் மேற்பகுதி வரி போன்றிருக்கும். இதை,

*' எஃகா டூனங் கடுப்பமெய் சிதைந்து '* (67:17)

என்று போரிலே விழுப்புண்பட்ட வீரனுடைய மார்புக்குப் புலவர் உவமை கூறுகிறுர். இவையேயன்றி இக்கட்டையைப் பற்றிய பிற குறிப்புகளேப் பதிற்றுப்பத்திலும் பிற சங்கப் பாடல்களிலும் காணக்கூடவில்லே.

**கணிச்சி**

கிணறு தோண்டல் போன்ற மண் தோண்டும் வேலேகளுக்குக் கூரிய அமைப்பையுடைய ஆயுதத்தைச் சங்கத் தமிழர் பயன்படுத்தியிருக்கின்றனர்.

*' பொன்செய் கணிச்சித் திண்பிணி யுடைத்துச்*
*சிரறுசில வூறிய நீர்வாய்ப் பத்தல் '* (22:12-13)

என்ற பாடல் அடிகளில் இந்த ஆயுதத்தைப் பற்றிய குறிப்பு வருகிறது. 'பொன்செய் கணிச்சி' என்றதனுல் இது இரும்பால் ஆனதென்பது புலனுகும். இரும்பைக் கரும்பொன் என்றும் வழங்குவர். (7) 'திண்பிணியுடைத்து' என்றதனுல் கருங்கல் நிறைந்த வலிய நிலத்தையும் உடைத்துத் தோண்டக்கூடிய உறுதியை இக்கருவி பெற்றிருந்தது விளங்குகிறது. இக்கணிச்சி, இன்றைய கடப்பாறையைப் போன்ற அமைப்புடைத்தாதல் கூடும். இக்கருவியின் முனேப்பகுதி கூர்மையானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் மண்ணுங் கருங்கற் பாறைகளும் கொண்டு இறுகப் பிணித்த நிலத்தைத் தோண்டவியலும்.

இனி, கணிச்சி என்ற சொல் மழுவாயுதம் என்ற பொருளிலும் வழங்கும் என்பர். (8) மழுவாயுதத்தின் அமைப்பு ஆழமான கிணறு தோண்டுவதற்கு ஏதுவானதல்ல. கலித் தொகையில்,

*' முன்பிஞேன் கணிச்சிபோற் கோடுசீஇ '* (கலி. 101:8)

என்ற வரிக்கு, 'இறைவனுடைய குந்தாலிப்படைபோலக் கூரிதாக ஏறுகளின் கொம்புகளேச் சீவி' என்று உரை கூறப்பட்டுள்ளது. இதனுல், கணிச்சிகள், ஏறுகளின் கொம்பைப் போன்ற கூரிய முனேயைப் பெற்றிருந்தன என்பது தெளிவாகிறது. கணிச்சி மழு போன்றதொரு ஆயுதமல்ல. மழு வேறு; கணிச்சி வேறு. (9)

*'கையது கணிச்சியொடு மழுவே மூவாய்*
*வேலுமுண்டத் தோலாதோற்கே'* (அகம்:கடவுள் வாழ்த்து: 5-6)

என்ற அடிகள் கணிச்சியும் மழுவும் வெவ்வேறுனவை என்பதை உறுதிப்படுத்துகின்றன. கணிச்சி, கிணறு தோண்டப் பயன்பட்ட கருவி என்பதை நற்றிணேயும் உறுதிப்படுத்துவது காண்க. (10)

### நீர் முகக்கும் கருவி

கிணற்றிலிருந்து நீர் முகப்பதற்காகப் பண்டைத் தமிழர் 'முகவை' எனப்படும் கருவியைப் பயன்படுத்தியுள்ளனர். நீர் முகப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதனுல் இது முகவையெனப் பட்டது. முகவை, மரத்தால் செய்யப்படுவது. (11) இன்று நாம் பயன்படுத்துவது போல இரும்பாலான சிறு வாளிகளை அன்று பயன்படுத்தினரா என்பது தெரியவில்லை. பதிற்றுப்பத்து,

*' பொன்செய் கணிச்சித் திண்பிணி யுடைத்துச்*
*சிரறுசில வூரிய நீர்வாய்ப் பத்தற்*
*கயிறுகுறு முகவை '* (22: 12-14)

என்று குறிப்பிட்டுள்ளது. இதனுல் கணிச்சி என்ற கருவியால் கிணறு தோண்டி அதிலிருந்து நீர் முகப்பதற்கு முகவையைப் பயன்படுத்தியது தெரிகிறது. 'கயிறு குறு முகவை' என்றதனுல், குறுகிய முகவையைக் கயிற்றில் கட்டி நீர் முகந்த நிலை அறியக் கிடக்கிறது. மண்ணும் கருங்கல்லும் கலந்து பிணிந்திருக்கின்ற நிலத்தைத் தோண்டுவது அரிய செயலாகும். வேலையின் கடினங் கருதி அகலமாகத் தோண்டாமல் குறுகலாக நிலத்தைத் தோண்டியிருக்கிருர்கள். அதுவும் ஆழமாகத் தோண்டியிருக்கிருர்கள். அப்படி ஆழமாகத் தோண்டப்பட்ட கிணறு இன்று நாம் பயன்படுத்தும் கிணறுகளைப் போன்று நேர்த்தியானதாய் அமைந்திருக்க வாய்ப்பில்லை. கிணற்றின் உட்பகுதி குறுகிய வாயுடையதாய் இருப்பது, 'பத்தல்' என்று இங்கே குறிக்கப் பெற்றிருக்கிறது. குறுகிய வாயைக் கொண்டும், மிக்க ஆழமுடைத்ததுமாய் இருந்த காரணத்தாலேயே கிணற்றில், சிறிய குறுகிய முகவையை நீண்ட கயிற்றில் கட்டி நீர் முகந்தனர். இவையேயன்றி முகவையைப் பற்றிய வேறு செய்திகள் பதிற்றுப்பத்திலும் பிற சங்கப் பாடல்களிலும் இருப்பதாய்த் தெரியவில்லை.

### சமையற் கருவிகள்

இன்று நாம் சமையலுக்குப் பயன்படுத்தும் பலவிதக் கருவிகளைப் போன்றே பண்டைய பதிற்றுப்பத்து மக்களும் பயன்படுத்தியுள்ளனர்.

### பானைகள் - மட்குடங்கள்

சோறு பொங்குவதற்கு இன்று நாம் பானைகளைப் பயன்படுத்துகிறேம். அவை மண்ணுலும், இரும்பாலும், பிற உலோகங்களாலும் செய்யப்பட்டவை. பதிற்றுப்பத்தின் பாடல்,

*' அடைச்சேம் பெழுந்த வாடுறு மடா '* (24:20)

என்பதன் வழி பானையை 'மடா' எனக் குறித்துள்ளது. பண்டைய தமிழர்கள் இப்பானையைச் சிறந்த அமைப்பில் உருவாக்கியுள்ளனர். இப்பானையின் அடிப்பகுதி சேம்பின் அடியைப் போலவும், அதன் வாய்ப் பகுதி சேம்பின் அகன்ற இலையைப் போலவும் அமைந்திருந்தது. பானைக்கு வழங்கப்பட்ட 'மடா' என்ற பெயரே 'மிடா' எனவும், 'முடா' எனவும் வழங்குகிறது. (-12) கலித்தொகை, கள் ஊற்றிவைக்கும் கலத்தை "மடா" என்று குறித்துள்ளது. (13) இதை நோக்க, கட்குடம் மண்ணுல் செய்யப்படுவது இயல்பாதலின் சோறு சமைக்கப்பட்ட பானைகளும் சங்கநாளில் மண்ணுலேயே செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பது உறுதியாகிறது.

இனி, கட்குடங்கள் பண்டை நாளில் தமிழர்களால் மிகுதியும் பயன்படுத்தப்பட்டன. இவை, 'தசும்பு' எனப் பதிற்றுப்பத்தில் குறிக்கப் பெற்றுள்ளன. (14) இவை எவற்றுலானவை, எத்தகைய அமைப்பைக் கொண்டவை போன்ற விளக்கங்கள் இந்நூலில் நேரிடை விளக்கங்களால் காணக்கூடவில்லை. இருந்தபோதிலும்,

*' நிரம்பகல் பறியா வேறு வேணி*
*நிறைந்து நெடிதிராத் தசும்பு '* (43:33 - 34)

என்ற பதிற்றுப்பத்தின் வரிகள் சில செய்திகளை உணர்த்தவே செய்கின்றன. பண்டை நாளில் கட்குடத்தை வைப்பதற்கு ஏணிபோன்ற அமைப்பையுடைய கருவி பயன்படுத்தப்பட்டுள்ளது. நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இந்தக் கருவியின் மீது கற்குடங்கள் வைக்கப்படும். அந்தக் கருவியை 'ஏறு ஏணி' என்று பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது. கட்குடம் வைக்கும் கோக்காலிக்கும் ஏணி என்பது பெயராதலின், அதனை ஏனைய ஏணிகளினின்று வேறுபடுத்துவதற்கு இது 'ஏறுஏணி' எனக் குறிக்கப்பட்டதென்பர். இதனால், கட்குடம் வைக்கும் ஏணிக்கு, கோக்காலி என்பதும் பெயரென்பது அறியக்கிடக்கிறது. (15)

மேற்கண்ட பாடல் வரிகளில், கோற்காலியில் கட்குடம் வைக்கப்பட்டிருக்கும்போது, அக்கோக்காலியின் வாய்ப்பகுதி முழுதும் நிரம்பியிராமல் சிறிது இடைவெளியுள்ளதாய் அமைந்திருப்பது, 'நிரம்பகல் பறியா வேறு வேணி' என்று குறிப்பிட்டுள்ளது. இதை நோக்க, கோக்காலியின் வாய்ப்பகுதி நாற்கோண முக்கோண வடிவினதாயும், அதில் வைக்கப்படும் குடம் கோள வடிவினதாயும் இருப்பது தெரியவருகிறது. குடம் கோள வடிவொடு இருந்தால் மட்டுமே, அது வைக்கப்படும் நாற்கோண முக்கோண வடிவுடைய கோக்காலியின் வாய்ப்பகுதி முழுதும் நிரம்பாமல் இடைவெளியொடு தோன்றவியலும், இவையேயன்றி ஏணி தொடர்பாகவும், கட்குடம் தொடர்பாகவுமுள்ள வேறு செய்திகளைப் பதிற்றுப்பத்திலும் பிற சங்கப் பாடல்களிலும் காணக்கூடவில்லை.

**உரல் - உலக்கை**

சங்க காலத் தமிழர்கள் தானிய வகைப் பொருட்களைக் குற்றுவதற்கு உரலையும் உலக்கையையும் பயன்படுத்தியுள்ளனர். பதிற்றுப்பத்தில், பண்டைத் தமிழர் பயன்படுத்திய உலக்கையைப் பற்றிய செய்தி ஓரளவு குறிப்பிடப்பட்டுள்ளது. பகைவர்களுடைய தலைகளை நொறுக்கி அழித்த செயலைக் குறிப்பிடும்போது,

*'மிளகெறி யுலக்கையி னிருந்தலை யிடித்து'* (41:21)

என்று பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது. 'உலக்கையால் இடிக்கப்பட்ட மிளகைப்போலப் பகைவர்தம் தலையை இடித்து' என்பது இதன் பொருளாகும். இதனால் மிளகையிடிப்பதற்கு அன்று உலக்கை பயன்பட்டது தெரிகிறது. பிறிதொரு பாடல்,

*' அவலெறிந்த வுலக்கை வாழைச் சேர்த்தி*
*வளைக்கை மகளிர் வள்ளை கொய்யும்'* (29:1 - 2)

என்ற வரிகளில், வளையணிந்த மகளிர், அவலிடித்த உலக்கையை வாழை மரத்தில் சார்த்தி விட்டு வள்ளைப் பூவைப் பறிக்கச் சென்ற செய்தியை உணர்த்துகிறது. இதனால் அவலிடிப்பதற்கும் அன்று உலக்கையைப் பயன்படுத்திய நிலை தெரிய வருகின்றது. இவையேயன்றிப் பல விதத் தினைப்பொருட்கள் உலக்கையைக் கொண்டு குற்றப்பட்டதை ஏனைய சங்கப் பாடல்கள் சாற்றும். (16)

இன்று மரத்தாலான உலக்கையின் நுனியில் இரும்பாலான பூணிடுவதும் முற்றிலும் இரும்பாலான உலக்கையைப் பயன்படுத்துவதும் வழக்கமாகிவிட்டது. பண்டை நாளில் மரத்தாலான உலக்கையில் பூணணிந்து பயன்படுத்தினர். பதிற்றுப்பத்து,

*' குரைத்தொடி மழுகிய வுலக்கை '* (24:19)

என்று குறிப்பதால், உலக்கையிலே பொருத்தப்பெற்ற பூண், குற்றுந்தோறும் ஓசையெழுப்பும் சிறப்பொடு அமைந்திருந்தது விளங்குகிறது. இது, பண்டைத் தமிழர் கைவேலையில்

மேம்பட்டிருந்த நிலையை உணர்த்துகிறது. உரலைப் பற்றிய குறிப்பேதும் பதிற்றுப்பத்தில் காணக்கூடவில்லை. உரலைப் பற்றிச் சொல்லுவதற்குரிய சூழல் அமையாமையின் புலவர்கள் அது பற்றிக் குறிப்பிடாது விட்டிருக்கலாம். ஏனைய சங்கப் பாடல்களில் உரலைப் பற்றிய செய்தி குறிப்பிடப்பட்டிருப்பதை நோக்க, (17) பதிற்றுப்பத்துத் தமிழரும் உரலைப் பயன்படுத்திய செய்தி தானுகப் பெறப்படும்.

சங்கத் தமிழர்கள் சந்தன மரத்தால் உரலையும், உலக்கையையும் செய்து பயன்படுத்தி யுள்ளனர். (18) யானையின் மருப்பும் உலக்கையாகப் பயன்பட்டுள்ளது. (19) சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்ற உரல், யானையின் முழந்தாளைப் போன்ற அமைப்பைப் பெற்றிருக்கின்றது. (20) அவ்வுரலின் அடிப்பகுதி பரந்திருந்தது. (21) உரலிலே, தினை வகையை இட்டு இடிப்பதற்கு அவர்கள் யானையின் மருப்பை அதிகமாகப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. பாறையிலே தினை வகைகளை இட்டு இடிக்கும்போதே அவர்கள் அதிகமாக யானையின் மருப்பைப் பயன்படுத்தியுள்ளனர். (22) பாறைகளின், அதிக ஆழமில்லாத, அகலமான குழிப்பகுதிகள் யானையின் தந்தத்தைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்திருப்பது இதற்குக் காரணமாக லாம். மரத்தால் செய்யப்படுகின்ற உரல் ஆழமாகவும், குறுகலாகவும் இருப்பதனுல், யானையின் மருப்பைப் பயன்படுத்துவதற்கு அவ்வளவு பொருத்தமானதாக இல்லாமல் இருந்திருக்கலாம்.

பாறைகளில் தினையிட்டு இடிக்கும் பழக்கமே பின்னுளில் உரலும் உலக்கையும் தோன்றுவதற்கு அடிகோலியிருக்க வேண்டும். குறிஞ்சி நிலத்திலே வாழ்ந்த தமிழர்கள் பாறையில் தினையிட்டு யானை மருப்பால் இடித்ததைச் சங்க இலக்கியப் பாடல்கள் அதிகமாகச் சாற்றுகின்றன. (23) குறிஞ்சி நிலத்திலே பாறைகள் அதிகமாக இருப்பது இதற்கு ஏதுவாக அமைந்திருக்க வேண்டும். ஏனைய நிலங்களில் பாறைகள் அதிகமாக இல்லாத நிலையில், அவ்வந்நிலத்து மக்கள் மரத்தால் செய்யப்பட்ட உரலை அதிகமாகப் பயன்படுத்தியிருத்தல் வேண்டும்.

**மத்து**

சமையல் தொடர்பான வேலைகளில் கடைவதற்கு இன்று நாம் மத்தைப் பயன்படுத்துகி றேம். பண்டை நாளில் தயிர் கடைவதற்கு மத்து பயன்பட்டது. பதிற்றுப்பத்தில்,

*' மத்துக்கயி றுடா வைகற்பொழுது '* (71:16)

என்ற அடி அமைந்துள்ளது. இதில், மத்திலே கயிற்றைக் கொடுத்து, அக்கயிற்றைக் கொண்டே தயிர் கடைந்த நிலை காட்டப்பட்டுள்ளது. பண்டை நாளில், ஆய்மகளிர் வைகறைப் பொழுதிலேயே தயிர் கடையும் வேலையைச் செய்து விடுவர். (24) வைகறைப் பொழுது கழிந்தபின் தயிர் கடையும் வேலையைச் செய்யமாட்டார்கள். அதற்குள்ளாகத் தயிர் கடையும் வேலையை முடித்துவிட்டிருப்பார்கள். எனவேதான், மேற்கண்ட வரியில் வைகறைப்பொழுது நீங்கிய பின் மத்தின் கயிறு ஆடாத நிலை சொல்லப்பட்டிருக்கிறது.

பதிற்றுப்பத்தின் பிறிதொரு வரி,

*' மத்துர றியமனை இன்னிய மிமிழா '* (26:3)

என்று மத்தைக் கொண்டு கடைவதனுல் ஏற்படக்கூடிய ஒலியைக் குறிப்பிடுகிறது. பெரும்பா லும் எல்லா வீடுகளிலும் தயிர் கடையும் வேலை நடைபெற்றதனுல், அந்த ஒலி மிகுந்திருந் தது. அந்த ஒலிப் பெருக்கால், இன்னிசைகளின் ஒலி வேண்டப்படாத நிலையெய்தியது. பதிற்றுப்பத்தில், தயிர் கடையும்போது எழுகின்ற ஒலி எத்தகையது என்பது பற்றிய மேல் விளக்கமேதும் காணக்கூடவில்லை. சங்கப் பாடல்களும், ஏனைய நூல்களும் மத்தைக் கொண்டு தயிர் கடையும் ஒலி, புலியின் உறுமலைப் போன்றிருப்பதாய்க் கூறுகின்றன. (25)

மேற்கண்ட செய்திகளால், பண்டை நாளில் ஆயர்களின் வீடுதோறும் தயிர் கடையும் நோக்கில் மத்து பயன்படுத்தப்பட்டது விளங்குகிறது. தயிர் கடைவதேயன்றி வேறு நோக்கங் களுக்காக மத்து பயன்பட்டதா என்பது பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்படவில்லை. மத்து மரத்தால் செய்யப்பட்டிருக்கும். மத்தைப் பற்றிய வேறு குறிப்பேதும் பதிற்றுப்பத்திலும் பிற சங்கப் பாடல்களிலும் இருப்பதாய்த் தெரியவில்லை.

**பயிர்த்தொழில் கருவிகள்**

பண்டை நாளில் பயிர்த்தொழில் நோக்கங்களுக்காகத் தமிழர்கள் பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். அவை பற்றிய சில குறிப்புகள் பதிற்றுப்பத்தில் காணப்படுகின்றன.

**கலப்பை**

அக்காலத்தில் நிலங்களை உழுதற்கு தமிழர்கள் கலப்பைகளைப் பயன்படுத்தினர். கலப்பை, ஏரென்றும் நாஞ்சிலென்றும் அன்று வழங்கப்பட்டிருக்கிறது. இதை,

*' தேஎர் பரந்தபுல மேஎர் பரவா*
*களிறு டியபுல நாஞ்சி லாடா '* (26:1 - 2)

என்ற பதிற்றுப்பத்து அடிகளால் உணரலாம். ஏர் என்பது, மென்புலமாகிய நன்செய்களை உழும் கலப்பையென்றும், நாஞ்சில் என்பது வன்புலமாகிய புன்செய்களை உழும் கலப்பையென்றும் அறிஞர் ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் கூறுவார். (26) நெல் விதைத்தற்குரிய வயல் நிலம் நன்செய் நிலம். கிழங்குவகைகளும் பிறவும் பயிரிடப்படுகின்ற மேட்டு நிலம் புன்செய் நிலம். இனி, குறிஞ்சியும் முல்லையும் வன்புலத்தின்பாற்பட்டவையென்றும், மருதமும் நெய்தலும் மென்புலத்தைச் சார்ந்தவை என்றும் கூறுவர். (27)

மேற்கண்ட பாடல் வரிகள், தேர் சென்று சேறுபட்ட நிலத்தையும், ஆண் பன்றிகள் கிளறிய வழி சேறுபட்ட நிலத்தையும் காட்டுகின்றன. இப்படிச் சேறுபட்ட நிலங்கள், கலப்பை கொண்டு உழ வேண்டாத நிலைக்குள்ளாகி விடுகின்றன. சமவெளி நிலங்களில் தேர் செல்லுதல் இயல்பாதலின் தேர் சென்ற மேற்கண்ட நிலம் நன்செய் நிலமாகும். புன்செய் நிலத்திலே கிழங்கு வகைகளும் பிறவும் இருப்பதனுல், ஆண் பன்றிகள் அவற்றையுண்ணும் பொருட்டு அந்நிலத்தைக் கிளறுதல் இயல்பு. களிறு (ஆண் பன்றி) ஆடிய மேற்கண்ட நிலம் புன்செய் நிலமாகும். இதனுல் கலப்பைகள் பயன்படுத்தப்படும் நிலத்தையொட்டியே அவற்றின் பெயர்களும் அமைந்தமை பெறப்படும்.

பதிற்றுப்பத்தின் பிற பாடல்களும், யானையும், குதிரையும், பன்றியும் சேறுபடுத்திய காரணத்தால் கலப்பையைக் கொண்டு உழப்பட வேண்டாத நிலங்களைக் காட்டுகின்றன. (28) நிலத்தையொட்டியே கலப்பைகளின் பெயர்களும் அமைந்துள்ளன என்பதைக் கீழ்க்காணும் பதிற்றுப்பத்தின் பாடல் வரிகள் உறுதிப்படுத்துகின்றன.

*' புன்புலம் வித்தும் வன்கை வினைஞர்*
*சீருடைப் பல்பக டொலிப்பப் பூட்டி*
*நாஞ்சி லாடிய கொழுவழி மருங்கின்*
*அலங்குகதிர்த் திருமணி பெறூஉம் '* (58:15 - 18)

இப்பாடலில் புன்செய் நிலம், 'புன் புலம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நிலத்தை உழுதற்குப் பயன்பட்ட கலப்பை 'நாஞ்சில்' என்று அழைக்கப் பெற்றுள்ளது. இதனுல், நன்செய் நிலத்தில் பயன்பட்ட கலப்பை 'ஏர்' என்றும் புன்செய் நிலத்தில் பயன்பட்ட கலப்பை 'நாஞ்சில்' என்றும் பெயர் பெற்றது உறுதியாகிறது.

பண்டை நாளில் கலப்பைகளில் எருதுகளைப் பூட்டி உழுதனர். மேற்கண்ட பாடலில்,

'பல்பக டொலிப்பப் பூட்டி' என்றமையால் ஒரு கலப்பையில் பல எருதுகளைப் பூட்டி உழுதது தெரிகிறது. புன்செய் நிலம் வன்மையானதென்பதால், வேலையின் கடுமையைக் கருதி ஒரு கலப்பையில் பல எருதுகளைப் பூட்டி உழுதிருக்கிறுர்கள். உழவு நோக்கத்துக்காக, எருதுகளை யன்றி வேறு விலங்குகளைக் கலப்பையில் பூட்டி உழுதனரா என்பதைப் பதிற்றுப்பத்திலும் பிற சங்கப் பாடல்களிலும் காணக்கூடவில்லை. அன்றைய உழவர்கள், பரந்த நிலங்களையெல்லாம் சில கலப்பைகளைக் கொண்டே உழுதனர் என்பதை,

*' பல்விதை யுழவிற் சில்லே ராளர் '* (76:11)

என்ற வரி உணர்த்துகிறது. முதன் முறையாக உழவுக்குச் செல்லுகின்ற உழவர்கள் புதிய கலப்பையையே பூட்டுவர் என்பதை 'கடியேர் பூட்டுநர்' (43:16) என்ற சொற்றேடர் உணர்த்து கிறது. இப்பழக்கம் இன்று 'பொன்னேர் பூட்டுதல்' என்று வழங்குகிறது. (29)

கலப்பைகளின் அமைப்பைப் பற்றிய விளக்கமேதும் பதிற்றுப்பத்தில் இருப்பதாய்த் தெரியவில்லை. சங்கப் பாடல்கள், கலப்பையினுடைய அமைப்பை ஒரு சிறிது விளக்கியுள்ளன. கலப்பையினுடைய வாய்ப்பகுதி யானையின் தந்தத்தைப் போன்று வளைந்தும், அதனுடைய கொழு, உடும்பினடைய முகத்தைப் போன்றும் அமைந்திருக்கும். (30)

**அரிவாள்**

இன்று நாம் நெல் அரிவதற்கு அரிவாளைப் பயன்படுத்துவது போன்றே பண்டை நாளிலும் அரிவாளைப் பயன்படுத்தி உள்ளனர்.

*' நெல்லின் செருவி னெய்தல் பூப்ப*
*அரிநர் கொய்வாண் மடங்க '* (19:21 - 22)

என்ற வரிகள், நெல்லரிபவர்கள் நெல்லரியும் பொழுது அவர்கள் பயன்படுத்தும் அரிவாளின் வெட்டுவாய்ப்பகுதி மடங்கி இருக்கின்ற நிலையைக் காட்டுகின்றன. நன்கு விளைந்த நெல்லின் தாள் பருத்து இருக்கும் என்பதால் அதை அரியும் பொழுது அரிவாளின் வெட்டுவாய்ப்பகுதி மடங்கிவிடுவது இயல்பு. அரிவாளின் அமைப்பு பற்றிய செய்தியேதும் பதிற்றுப்பத்தில் காணப்படவில்லை. பெரும்பாணுற்றுப்படையில், அரிவாள் வளைந்த அமைப்பிலானது என்ற குறிப்புள்ளது. (31) நெல்லரிவதேயன்றிப் பிற நோக்கங்களுக்கும் அரிவாளைப் பண்டைத் தமிழர் பயன்படுத்தினர். (32) நெல் அரிவதற்கு, பிற நோக்கங்களுக்காகப் பயன்படுத்திய அரிவாளையும் அவர்கள் பயன்படுத்தினுர்களா அல்லது நெல் அரிவதற்கென்றே சிறப்பாகச் செய்யப்பட்ட அறிவாளை மட்டும் பயன்படுத்தினுர்களா என்பது பற்றிய குறிப்பு பதிற்றுப்பத்திலும் பிற சங்கப் பாடல்களிலும் இருப்பதாய்த் தெரியவில்லை.

**எந்திரம்**

பண்டைத் தமிழர்கள் கரும்புகளைப் பயிர்செய்து அவற்றை அரிந்து சாறு பிழிந்தனர். சாறு பிழிவதற்கு, சாறு பிழியும் எந்திரத்தைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. இவ்வெந்திரத் தைப் பற்றிய சில குறிப்புகள் பதிற்றுப்பத்தில் காணப்படுகின்றன.

*' ..................... அறைநர்*
*தீம்பிழி யெந்திரம் பத்தல் வருந்த '* (19:22-23)

என்ற வரிகள் கரும்பைச் சாறு பிழியும் எந்திரத்தைக் குறிப்பிடுகின்றன. கரும்பை அறுத்து எந்திரத்திலிட்டு அரைப்பவர் இங்கே அறைநர் எனப்பட்டார். அவர்கள் அப்படிக் கரும்பைச் சாறு பிழியும்போது அந்த எந்திரத்திலுள்ள சாறு விழும் தூம்பு வளைந்தது. தூம்பு, அன்று பத்தல் எனவும் வழங்கப்பட்டது. இன்று அதைக் கூன்வாய் என்போம். கூன்வாய் வளையும் வண்ணம் அதிகமான சாறு வெளிப்பட்டிருக்க வேண்டும். விளைந்த கரும்பு அதிகமான சாறு

கொண்டதாய் இருந்தது. எனவேதான் கரும்பிலிருந்து வெளிப்பட்ட மிகுந்த சாற்றினுல் கூன்வாய் வளைந்தது. அதிகமான சாறு கொண்ட கரும்பை விளையச் செய்கின்ற மேன்மையான விவசாய அறிவை அன்றைய தமிழர்கள் பெற்றிருந்ததை இதன் வழி அறியலாம் அல்லது அதிகமான சாறு வெளிப்பட, ஒரே சமயத்தில் பல கரும்புகளைச் சாறு பிழியும் அமைப்புடைய தாக அந்த எந்திரம் இருந்திருக்க வேண்டும். இவ்வெந்திரம் மரத்தால் செய்யப்பட்டிருத்தல் கூடும். இவற்றை மனிதர்கள் கையால் இயக்கி இருக்க வேண்டும். அவ்வெந்திரத்தை விலங்குகளைக் கொண்டும் இயக்கியிருக்கலாம். இவ்வெந்திரம் தொடர்பான வேறு செய்திகள் பதிற்றுப்பத்தில் இருப்பதாய்த் தெரியவில்லை.

பிற சங்கப் பாடல்கள், இவ்வெந்திரத்திலிருந்து எழும் ஒலி யானை பிளிறுவது போலிருக்கும் என்று குறிப்பிடுகின்றன. (33) இவ்வெந்திரத்தின் ஒலி கேட்ட வாளை மீன் துள்ளிப் பாயும் என்று புறநானூறு கூறுகிறது. (34) எந்திரம் என்ற சொல் வடசொல்லின் சிதைவாகும். கரும்பாலை என்பதே கரும்பாட்டும் எந்திரத்துக்குரிய சரியான தமிழ்ச் சொல்லாகும். (35)

### அளவைக் கருவிகள்

சங்க காலத் தமிழர்கள் பலவித அளவைக் கருவிகளைக் கொண்டு பொருட்கள் அளவையும், நிறையையும் அளந்துள்ளனர். வெவ்வேறு வகைப் பொருட்களை அளப்பதற்கு வேறுவேறு அளவைக் கருவிகளைப் பயன்படுத்தியிருப்பதைப் பதிற்றுப்பத்து வழி அறிய முடிகிறது.

## அம்பணம்

நெல்லையளப்பதற்கு 'அம்பணம்' எனப்படும் கருவியைப் பண்டைத் தமிழர் பயன்படுத்தி யுள்ளனர். இக்கருவி மூங்கிலால் செய்யப்பட்டதாகும். (36) இதன் வாய்ப்புறத்தே செம்பினுல் பட்டையிடப்பட்டிருக்கும். மூங்கிலால் ஆன இதன் வாய்ப்பகுதி நெல்லை அதிகமாகத் திணித்து அளக்கும் காரணத்தால் கிழிந்து விரிந்து போகும். அவ்விரிவைத் தடுக்கவே செம்பினுல் அதன் வாய்ப்பகுதி பட்டையிடப்பட்டது. இச்செப்புப் பட்டை செப்புறை எனப்படும். (37) அம்பணத்திலோ, அச்செப்புப்பட்டையிலோ வேலைப்பாடுகளேதும் செய்திருந்தார்களா என்பதைப் பதிற்றுப்பத்து விளக்கவில்லை. அம்பணத்தின் வாய்ப்பகுதி விரிவதனுல் அதனைச் சுற்றியுள்ள செப்புப் பட்டை கழன்று விடும். இதை,

*'அம்பண வளவை விரிந்துறை போக்கி '* (66:8)

என்ற பதிற்றுப்பத்தின் வரி உணர்த்துகிறது. அம்பணம் எனப்படும் இக்கருவி இன்றும் பயன்பாட்டில் உள்ளது. இன்று அதை இரும்பால் செய்து பயன்படுத்துகின்றனர். (38) இக்கருவியின் பயன்பாடு கருதி எப்போதும் இதை நெற்குவியலின் மீது செருகி வைத்திருப்பர். இதை,

*' அம்பண வளவை யுறைகுவித்து '* (71:5)

என்று பதிற்றுப்பத்து உணர்த்துகிறது. இவற்றையன்றி அம்பணத்தைப் பற்றிய வேறு செய்திக ளைப் பதிற்றுப்பத்திலும் பிற சங்கப் பாடல்களிலும் காணக்கூடவில்லை.

**கா**

சங்கத் தமிழர், பொன்னை நிறுப்பதற்குக் 'கா' எனப்படும் அளவையைப் பயன்படுத்தியி ருக்கிறுர்கள். பதிற்றுப்பத்தின் ஆறும் பதிகம், காக்கைபாடினியார் நச்செள்ளையாருக்கு ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஒன்பது காப்பொன்னைப் பரிசளித்தான் என்று குறிப்பிட்டுள் ளது. 'கா' எனப்படும் அளவைக்கு எந்த அமைப்பிலான கருவியைப் பயன்படுத்தினர்; அது எதனுல் செய்யப்பட்டது என்பது பதிற்றுப்பத்தில் விளக்கப்படவில்லை. தொல்காப்பியர், 'கா' என்பது நிறை எனக் குறிப்பிட்டுள்ளார். (39) 'கா' என்னும் நிறை நூறு பலம் கொண்டது

என்பர். (40) 'கா' என்பது துலாக்கோலையும் குறிக்குமென்பர். (41) இக்கருத்துக்கு எந்தச் சான்றுமில்லை.

சங்க இலக்கியத்தின் பாடல்கள், துலாக்கோலை, தெரிகோலேன்றும், நேர்கோலென்றும் குறிப்பிடுகின்றன. (42) பதிற்றுப்பத்திலன்றி ஏனைய சங்கப் பாடல்களில் துலாக்கோலையோ, நிறுவையையோ குறிப்பதற்கு 'கா' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதாய்த் தெரியவில்லை. இவற்றை நோக்க, 'கா' என்ற சொல் துலாக்கோலையல்லாமல் நிறையைக் குறிப்பது என்பது தெளிவாகிறது. 'கா' எனப்படுவது நூறு பலம் கொண்டதென்பதால், பதிற்றுப்பத்து குறிப்பிடும் 'ஒன்பது காப்பொன்' என்ற சொற்றேடர் தொள்ளாயிரம் பலம் கொண்ட பொன்னைக் குறிப்பிடு கிறது எனத் தெரிகிறது. 'கா' என்னும் நிறையளவைக் கண்டறிவதற்கு இன்று நாம் பயன்படுத் தும் துலாக்கருவியைப் போன்று அன்று பயன்படுத்தியிருத்தல் கூடும். இது தொடர்பான விளக்கமேதும் பதிற்றுப்பத்தில் இல்லை. பிற சங்கப் பாடல்களில், 'கா' என்ற சொல் அளவையைக் குறிக்கும் நோக்கில் பயன்படுத்தப்பட்டதாய்த் தெரியவில்லை.

**பாண்டில் விளக்கு**

பண்டை நாளில், இரவு நேரங்களில் ஒளி பெறுவதற்காகத் தமிழர்கள் விளக்குகளைப் பயன்படுத்தியுள்ளார்கள். ஒளி பெறும் நோக்கில் தமிழர்கள் பயன்படுத்திய பாண்டில் விளக்கைப் பற்றிய செய்தி பதிற்றுப்பத்தில் காணப்படுகிறது.

*' சுடரும் பாண்டிற் றிரு நாறு விளக்கத்து*
*முழாவிமிழ் துணங்கை.............'* (52: 13 -14)

என்ற வரிகள், இரவு நேரங்களில், பாண்டில் விளக்கின் ஒளியில் தமிழர்கள் துணங்கைக் கூத்தாடிய நிலையைக் காட்டுகின்றன. மேற்கண்ட பாடல் வரிகளும்,

*' சொரிசுரை கவரு நெய்வழி புராலின்*
*பாண்டில் விளக்குப் பரூஉச் சுடரழல '* (47:5 -6)

என்ற அடிகளும், அன்றைய பாண்டில் விளக்கின் அமைப்பை ஓரளவு விளக்கியுள்ளன. இவ்விளக்கை, திரியிட்டும் நெய்யிட்டும் பயன்படுத்தியுள்ளார்கள். விளக்கினுடைய சுரையில் திரியிட்டு, பிறகு அது நிரம்பும் வண்ணம் நெய்யிட்டிருக்கிறுர்கள். 'அகல்போல் இடம் விரிந்து ஒரு பக்கத்தே குவித்து சுரையுடைத்தாய் உள்ளே திரி செறிக்கப்பட்ட கால் விளக்கே பாண்டில்விளக்கு' என்பர். (43) இதனுல் பாண்டில் விளக்கின் அடிப்பாகம் அகன்றும், மேற்பாகம் மிகக் குறுகியும் இருக்கும் என்பது விளங்குகிறது. குறுகியிருக்கின்ற மேற்பாகமே சுரையெனப்படுகின்றது.

திரி முழுவதும் எரிந்து போகாவண்ணம் தடுத்தற்குச் சுரை பயன்படும். (44) இப்பாண் டில் விளக்கு எதனுல் செய்யப்பட்டது என்பது பதிற்றுப்பத்துப் பாடலில் விளக்கப்படவில்லை. அறிஞர் ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள், இவ்விளக்குகள் சேலம் மாவட்டத்திலும், வட ஆர்க்காடு மாவட்டத்திலும் இக்காலத்து மண்ணெண்ணெய் எரிக்கும் பேரொளி விளக்குகள் வருவதற்குமுன் வழக்கில் இருந்தன என்றும் மூங்கில்களை உயரமாக நட்டு அவற்றின் தலையை மூன்று வரிச்சல்களாகப் பகுத்து அவற்றின் இடையே மட்பாண்டிலைச் செறித்துப் பருத்த திரியிட்டு எண்ணெய் பெய்து எரிப்பர் என்றும் கூறுகின்றுர். (45) இதை நோக்க, பாண்டில் விளக்கு, பண்டை நாளில் மண்ணுல் செய்யப்பட்டிருக்கலாம் எனக் கொள்வதற்கு இடமுண் டாகிறது. இன்னும், மூங்கில்களை நட்டு அவற்றின்மீது இவ்விளக்குகள் வைக்கப்படுவதால் பாண்டில் விளக்குகள், 'கால்விளக்கு' என்றும் அழைக்கப் பெறுகின்றன. (46)

இரவு நேரங்களில் துணங்கைக் கூத்து நடந்தேறுவதற்கு இவ்விளக்கினுடைய ஒளி மிகுந்திருத்தல் அவசியமாகும். மிகுந்த ஒளியைப் பெறுவதற்காகப் பருத்த திரியைப் பயன்படுத் தியிருக்கிறுர்கள். இதையே, 'பாண்டில் விளக்குப் பரூஉச் சுடரழல' (47:6) என்று பதிற்றுப்

பத்து குறிப்பிட்டுள்ளது. பொதுவாகவே, பண்டை நாளில் பாண்டில் விளக்கிலிருந்து பெருவொளியைப் பெறுவதற்காகப் பருத்த திரியையே இட்டிருந்தார்கள் என்பதைப் பிறரும் சாற்றுவர். (47) பாண்டில் விளக்கிலிருந்து எழுகின்ற ஒளி, திருவிளங்கும் ஒளியெனப்படுகிறது. இஃதன்றி, பாண்டில் விளக்கைப் பற்றிய வேறு செய்திகளைப் பதிற்றுப்பத்திலும் ஏனைய சங்கப் பாடல்களிலும் காணக்கூடவில்லை.

**ஊசி**

இன்று நாம் பல்வேறு நோக்கங்களுக்காக ஊசிகளைப் பயன்படுத்துகிறோம். இது போன்றே பண்டை நாளிலும் தமிழர்கள் ஊசியைப் பயன்படுத்தியுள்ளார்கள். அன்று அவர்கள் பயன்படுத்திய ஊசி, இன்று நாம் பயன்பாட்டில் கொண்டுள்ள நேர்த்தியான ஊசியைப் போல் இல்லாமல் இருந்திருக்கலாம். அதன் பயன்பாட்டில் அன்றிருந்த நிலைக்கும் இன்றிருக்கும் நிலைக்கும் பெரிய வேறுபாடு இருப்பதற்கு வாய்ப்பில்லை.

பதிற்றுப்பத்தில், ஊசியைப் பற்றிய செய்தி ஒரு சிறிது சொல்லப்பட்டிருக்கிறது. இன்று, உடம்பிலே பெரியதாய் புண்படின் அதை விரைவில் குணப்படுத்துவதற்காகத் தைத்து மருந்திடுகிறோம். அதுபோலவே பண்டை நாளில், உடலில் படும் பெரிய புண்ணைக் குணப்படுத்துவதற்கு அதைத் தைத்திருக்கிறார்கள். இதை,

*'மீன்றேர் கொட்பிற் பணிக்கய மூழ்கிச்*
*சிரல்பெயர்ந் தன்ன நெடுவள் ளூசி*
*நெடுவசி பரந்த வடுவாழ் மார்பு '* (42: 2-4)

என்று பதிற்றுப்பத்தடிகளால் அறியலாம். மீன்கொத்திப் பறவை தன்னுடைய நீண்ட அலகைத் தாழ்த்திக் கொண்டு நீரிலே மூழ்கி, அலகை மேல் நிறுத்தி மேலெழும்புவது போன்று ஊசி கொண்டு புண்ணை தைக்கின்ற நிலை அமைந்துள்ளது. 'நெடுவள்ளூசி' என்றதனால் அவ்வூசி நெடியதாகவும், வெண்மையானதாகவும் இருந்துள்ளது புலப்படுகிறது. இவ்வூசியில் எத்தகைய இழையைக் கோத்துப் புண்ணைத் தைத்தார்கள் என்பது தெரியவில்லை. நூலிழை இந்நோக்கத் துக்குப் பயன்படுத்தப்பட்டிருத்தல் கூடும். இது பற்றிய விளக்கமேதும் பதிற்றுப்பத்தில் காணக்கூடவில்லை.

பண்டை நாளில் பருத்தி ஆடைகளும் பட்டாடைகளும் பயன்படுத்தப்பட்டதை நோக்க, அந்த ஆடைகளை அணிந்து கொள்ளக்கூடிய நிலையில் ஒழுங்கு படுத்தித் தைப்பதற்கு ஊசியும் நூலும் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும். பதிற்றுப்பத்தின் பாடலொன்று,

*' புள்ளி யிரலைத் தோலூ னுதிர்த்துத்*
*தீதுகளைந் தெஞ்சிய திகழ்விடு பாண்டிற்*
*பருதி போகிய புடைகிளை கட்டி*
*எஃகுடை யிரும்பி னுள்ளமைத்து "* (74: 10-13)

என்று, தோலாடையின் உள்பகுதியில் அழகிய வேலைப்பாடுகளை மாணிக்கமணி கொண்டு செய்துள்ள நிலையைக் காட்டுகிறது. இவ்வேலைபாட்டைச் செய்வதற்குக் கூரிய இரும்புக் கருவியைப் பயன்படுத்தியுள்ளனர். இக்கருவி ஊசியாகும். ஊசியைக் கொண்டு தோலாடை யின் உள்பக்கத்தில் பூ வேலைப்பாடுகளெல்லாம் பண்டை நாளில் செய்துள்ளனர் என்பது இதனால் உறுதியாகிறது.

இன்று நாம் வழங்குவது போன்றே அன்றும் ஊசி என்ற சொல்லே வழக்கத்தில் இருந்தது. அன்று கூர்மையான நிலையைக் குறிப்பதற்கும் 'ஊசி' என்ற சொல்லைப் பயன்படுத் தியிருக்கிறார்கள். குவிந்த அரும்பு போன்ற வெள்ளிய பனங்குருத்தை ஊசியின் கூர்மைக்கு ஒப்பிடுகிறார்கள். பதிற்றுப்பத்து இதை, 'குவிமுகி மூசி வெண்டோடு' (70:7) என்று குறிக்கி றது. இதை நோக்க ஊசி அன்றும் மிகவும் கூர்மையானதாகச் செய்யப்பட்டிருக்கலாம் என்ற

எண்ணம் வலுக்கிறது. இவையன்றி ஊசி தொடர்பான வேறு செய்திகள் பதிற்றுப்பத்திலும் பிற சங்கப்பாடல்களிலும் இருப்பதாய்த் தெரியவில்லை.

**வண்டி**

பண்டை நாளில், பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு வண்டிகளைப் பயன்படுத்தி யுள்ளார்கள். இவ்வண்டிகளில் எருதுகளைப் பூட்டிப் பயன்படுத்தினர். (48) சங்கத் தமிழர், வண்டிகளில் எருதுகளைப் பூட்டிப் பயன்படுத்தியதை,

*' நெய்தன் மரபி னிரைகட் செறுவின்*
*வல்வா யுருளி கதுமென மண்ட*
*அள்ளற் பட்டுத் துள்ளுபு துரப்ப*
*நல்லெருது முயலு மளறுபோகு விழுமத்து*
*சாகாட் டாளர்.....................'* (27: 10-14)

என்ற பதிற்றுப்பத்தின் அடிகளால் அறியலாம். இன்று மரத்தால் செய்யப்படும் மாட்டு வண்டிகளைப் போலவே அன்றும் மரத்தால் செய்து பயன்படுத்தியுள்ளார்கள். இந்த வண்டிக்கு இரண்டு பக்கமும் சக்கரங்கள் பொருத்தியிருக்கின்றார்கள். அச்சக்கரங்கள் மிக்க வலிமையு டையனவாய் அமைக்கப் பெற்றிருந்தன என்பதை 'வல்வா யுருளி' என்ற சொற்றொடர் உணர்த்துகிறது. வலிய மர உருளையால் ஆக்கப்படும் சக்கரம் என்பதனால், அது சேற்றில் புதைந்த போதும் பழுதடையாத வலுப் பெற்றிருக்கும். இந்த வண்டியைச் செலுத்துபவர் 'சாகாட்டாளர்' எனக் குறிக்கப் பெறுகிறார். வண்டியைச் சகடம் என்றும் அழைப்பர். (49) சகடத்தைச் செலுத்தி ஆள்பவர் என்பதனால் இவர் சாகாட்டாளர் எனப்படுகிறார்.

வண்டியிலே பெய்யக்கூடிய பளுவைத் தாங்கிக் கொள்ளக் கூடிய வலியுடையதாய் அதன் அச்சுமரம் அமைக்கப்பட்டிருக்கும். சில நேரங்களில் இவ்வச்சு மரம் பளுத்தாங்காமல் முறிந்து போவதுமுண்டு. இதற்காக, முன்னெச்சரிக்கையாக அச்சு மரத்தோடு இணைத்து இன்னொரு அச்சு மரத்தையும் கட்டி வைப்பர். இது 'சேமவச்சு' எனப்படும். (50) அச்சுமரம் வலுவுடையதாகவும் பருத்த அமைப்புடையதாகவும் இருக்கும். இதன் அமைப்பு மத்தளத்தைப் போன்று இருக்குமென்பர். (51) இவ்வச்சு மரத்தின் விளிம்பிலே சக்கரத்தைப் பூட்டி, அது கழன்று வராமலிருக்க அச்சாணியிட்டிருப்பார்கள். இந்தச் செய்திகள் பிற சங்க நூல்களிலே யன்றிப் பதிற்றுப்பத்தில் இருப்பதாய்த் தெரியவில்லை.

**வேட்டைக் கருவிகள்**

பண்டை நாளையத் தமிழர் விலங்குகளை வேட்டையாடுவதற்குப் பலவிதக் கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். அக்கருவிகளுள் விலங்குகளைத் தொலைவிலிருந்து மறைந்து நின்று வீழ்த்துவதற்கு வில்லும் அம்பும் பெரிதும் பயன்பட்டன. வில், சேரர்கள் பெரிதும் போற்றிய கருவியாகும். சேரர்கள், வில்லர்கள் என அழைக்கப்படுவதும், வில்லைக் கொடியாகவும் முத்திரையாகவும் அவர்கள் ஏற்றுக் கொண்டதும் இதை உறுதிப்படுத்தும். (52)

போரிலே சேரர்கள் வில்லையும் அம்பையும் பெரிதும் பயன்படுத்தியிருக்கின்றனர். பதிற்றுப்பத்தின் தமிழர் வேட்டையாடுவதற்கு வில்லைப் பயன்படுத்தினர் என்பதை, 'கொலைவில் வேட்டுவர்' (30:9) என்ற அடி உணர்த்துகிறது. பதிற்றுப்பத்து, சேரர்களின் மறத்தைப் போற்றிப் பாடும் நூலாதலின் வேட்டைத் தொழிலிலே அவர்கள் பயன்படுத்திய வில், அம்பு பற்றி அதிகமாகப் பேசவில்லை. பண்டைய சேரர்கள் போருக்கும், வேட்டைக்கும் வெவ்வேறுவித மான வில்லைப் பயன்படுத்தினரா என்ற குறிப்பு பதிற்றுப்பத்திலும் பிற சங்கப்பாடல்களிலும் காணப்படவில்லை. வேட்டைக்கு வில்லும் அம்பும் பயன்படுத்தப்பட்டதைக் குறுந்தொகைப் பாடலும் உறுதிப்படுத்தும். (53) வலைகளைப் பயன்படுத்தியும் பண்டை நாளில் வேட்டை யாடினர். 0(54) வேலெய்து வேட்டையாடுவது பண்டை நாளில் இயல்பானதாக இருந்தாலும் அது பற்றிய குறிப்பேதும் பதிற்றுப்பத்திலும் பிற சங்கப்பாடல்களிலும் காணப்படவில்லை.